அழகுசாதன அன்பளிப்பு
பொருள்களையும்
கைக்கடிகாரங்களையும்
வாங்குவதற்கு
சிறந்த ஸ்தாபனம்
ஞானம்
விற்பனைக் கூடம்
66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

எவர்சில்வர் பிளாஸ்ரிக்,
அலுமினிய பொருள்களை
வாங்குவதற்கு யாழ். நகரில்
சிறந்த ஸ்தாபனம்.
ஞானம்
விற்பனைக் கூடம்
66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 05 திங்கட்கிழமை (19 - 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 204

# தமிழீழப் போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரி கனடாவில் மிகப் பிரமாண்டமான பேரணி

## 25,000 பேருக்கும் அதிகமானோர் ரொறொன்ரோ நகரில் திரண்டனர்

ரொறொன்ரோ, ஜூன் 19

தமிழீழ போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரும் மிகப் பிரமாண்டமான பேரணி ஒன்று --

கனடாவின் மாநிலத் தலைநகரங்களில் ஒன்றான ரொறொன்ரோவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை -- நடத்தப்பட்டது.

வெளிநாடுகளில் நடைபெற்ற தமிழீழ ஆதரவுப் பேரணிகளில் இதுவரை இல்லாத வகையில் 25,000 க்கும் அதிகமான மக்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

ஈழத் தமிழர்கள் நடத்திய இப்பேரணியில் கனேடிய ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

தமிழீழப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்; தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரிக்க வேண்டும்; தமிழீழத்தை அங்கீகரிக்கவேண்டும்; கனேடிய அரசு ஸ்ரீலங்கா அரசுக்கு எந்த வகை உதவியையும் வழங்கக்கூடாது — என்று வலியுறுத்தும் விதத்தில் இந்தப் பிரமாண்டமான பேரணி நடைபெற்றது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

கடற்படையினரின் தாக்குதலைத் தொடர்ந்து

## காணாமற்போன 10 மீனவர்களும் நேற்று குருநகரை வந்தடைந்தனர்

குருநகர், ஜூன் 19

மண்டைதீவு மற்றும் பாலதீவு கடற்பகுதிகளில் கடற்படையினர் கடந்த புதன்கிழமை மேற்கொண்ட தாக்குதல்களின்போது காணாமற் போய்இருக்கலாம் அல்லது கைது செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதப்பட்ட பத்துப்பேர் நேற்று குருநகரை வந்தடைந்தனர்.

கடற்படையினரின் தாக்குதலை அடுத்து கடந்த 4 நாட்களாக இரணைதீவு கடற்பகுதியில் பிரஸ்தாப மீனவர்கள் தங்கி இருந்ததாகத் தெரிவித்தனர்.

இந்த மீனவர்கள் அங்கு தங்கியிருந்தபோது ஆண் ஒருவரின் சிதைந்த சடலம் கரை ஒதுங்கியதாகவும், அந்தச் சடலத்தை மீட்டு தகனம் செய்ததாகவும் தெரிவித்தனர்.

சிவப்பு நிற பெனியனுடன் காணப்பட்ட அந்தச் சடலத்துக்குரியவர் இந்திய மீனவராக இருக்கலாம் என்றும் அவர்கள் கூறினர்.

இதேவேளை பூநகரி ஒருகரை என்னும் கடற்கரைப் பகுதியிலும் அழுகிய நிலையில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவித்தது. (ஓ-51)

## கப்பலை எங்கு சோதனை செய்வது என்பதை படையினரே முடிவு செய்வர்

### "நரோமா" சேவை குறித்து இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஜூன் 19

பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'நரோமா' பயணிகள் கப்பலையும், அதில் பயணம் செய்யும் பிரயாணிகளையும்—

எந்த இடத்தில் வைத்துச் சோதனை செய்யவேண்டும் என்பதனை வெளியார் எவரும் கடற்படையினருக்கு உத்தரவிட முடியாது.

அதனைப் பாதுகாப்பு அமைச்சே —கடற்படையே —முடிவு செய்யும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் சரத் முனசிங்கா.

வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

அவர் கப்பல்சேவை குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஐந்து வருடங்களாக செஞ்சிலுவைச் சங்கம் கப்பல் சேவை நடத்துவதற்கான தனது உதவியை நல்கி வருகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி முகாம்கள் மீது விரைவில் வான் தாக்குதல்

### புலிகள் நடத்துவராம்

கொழும்பு, ஜூன் 19

வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் விரைவில் வான் தாக்குதலை மேற்கொள்ளக்கூடும் என்று "ரஷ்மிய" சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் வசம் விமானங்கள் உள்ளன என்று தென்பகுதி பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் வெளியாகிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

புலிகள் வான் தாக்குதல் நடத்தலாம் என்று கொழும்பிலும் கேந்திர இடங்கள் பலவற்றில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன என்பதும் தெரிந்ததே. (ஓ-6)

### தகவல் தரவும்



மிக மோசமான மோசடிப் பேர்வழி இவர். எம்மால் இவர் தீவிரமாகத் தேடப்படுகிறார். இவர் பற்றிய தகவல் தெரிந்தால் அண்மையில் உள்ள காவல்துறை நிலையத்துக்கோ அல்லது இயக்க முகாமுக்கோ அறியத்தரவும்.

— இவ்வாறு விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர். (ஓ-3)

## பூநகரியில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 19

பூநகரிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது.

இம்மோதலில் லெப்டினன்ட் நீலவண்ணன் (இராசலிங்கம் சசிகரன் — புங்குடுதீவு), வீரவேங்கை அமுதினியன் (பாலசுப்பிரமணியம் ஜெயகரன் — சங்கானை) ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

இதேவேளை —

பூநகரிக்கு வடக்கே விடுதலைப் புலிகளின் தாக்குதலின் போது ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ஓ-3)

மட்டக்களப்பு எல்லைப் பகுதியில் உள்ள

## சிங்களக் குடியேற்றக் கிராமத்தில் புலிகள் தாக்கி 8 படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 19

மட்டக்களப்பு எல்லைப் புறத்தில் உள்ள — அத்துமீறிய சிங்களக் குடியேற்றக் கிராமமான அனுகம்புரவில் — ரோந்தில் ஈடுபட்டிருந்த படையணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் 8 இராணுவத்தினர் உயிரிழந்தனர். இன்னும் சிலர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

மட்டக்களப்பு — பொலன்னறுவை எல்லைப் பகுதியில் உள்ள அனுகம்புர கிராமத்தில் நேற்றுக் காலை 7-20 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 5 நிமிடங்கள் மட்டுமே நடந்த இந்த வெற்றிகரத் தாக்குதலின் போது ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலின் போது ஏழு இராணுவத்தினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர் என்று 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

இதேவேளை, பொலன்னறுவப் பகுதியில் நடந்த தாக்குதல் ஒன்றில் எட்டுப் படையினர் கொல்லப்பட்டதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

மட்டக்களப்பு எல்லைக் கிராமத்தில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ ஏ. கே. எல். எம். ஜி. | — 02 |
| ★ அதற்குரிய ரம் மகஸின் | — 10 |
| ★ ரி. 81 ரகத்துப்பாக்கி | — 03 |
| ★ ரி. 56- 1 ரகத்துப்பாக்கி | — 02 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. லிங்குடன் ரவைகள் | — 750 |

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுக்கு உணவுப் பொருள் 25 வீதமே இதுவரை வந்துள்ளது

யாழ்ப்பாணம், ஜூன். 19

யாழ். மாவட்டத்துக்கு இவ்வாண்டு தேவையான உணவுப் பொருள்களில் ஆறுமாதம் முடிவடையும் நிலையில் 25சதவீத அளவுடைய பொருள்களே இங்கு வந்து சேர்ந்துள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில்உள்ள மக்களுக்கு இவ்வாண்டுக்கு ஒரு லட்சத்து 38 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் தேவை என மதிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் ஆறுமாதம் முடிவடையும் நேரத்தில் 34 ஆயிரத்து 789 மெற்றிக் தொன் உணவுப்பொருள்களே —அதாவது 25.2 சதவிதமான உணவுப் பொருள்களே — கப்பல்களில் வந்து சேர்ந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் மூலம் அறிய வந்திருக்கிறது.

40 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசிக்குப்பதிலாக 7ஆயிரத்து 500 மெற்றிக்தொன் அரிசியும் —

60 ஆயிரம் மெற்றிக்தொன் மாவுக்குப் பதிலாக 21 ஆயிரத்து 275 மெற்றிக்தொன் மாவும் —

18 ஆயிரம் மெற்றிக்தொன் சீனிக்குப் பதிலாக 3 ஆயிரத்து 653மெற்றிக்தொன் சீனியும்—

8 ஆயிரம் மெற்றிக்தொன் மைசூர் பருப்புக்குப் பதிலாக ஆயிரத்து 818 மெற்றிக்தொன் மைசூர் பருப்பும் —

2 ஆயிரம் மெற்றிக்தொன் பாம்மா வகைகளுக்கு பதிலாக 280 மெற்றிக் தொன் பாம்மா வகைகளும் —

10 ஆயிரம் மெற்றிக் தொன் ஏனைய உணவுப்

[4ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கே பொருள்களை அனுப்புவதில் அரசின் மறைமுக கெடுபிடி நீடிக்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடக்குக்கு உணவுப்பொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவதற்கு அரசு கடைப்பிடித்து வரும் மறைமுகமான கெடுபிடியில் [தடையில்] எந்த வித மாற்றமும் இல்லை என்று கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

கடந்த இரு வாரங்களுக்கு மேலாக யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் கொழும்பில் தங்கி நின்று இது சம்பந்தமாக முயற்சி எடுத்த போதும் அரசின் முடிவில் மாற்றம் எதுவும் இல்லை என்றும் தெரியவந்தது.

யாழ். மாவட்டத்துக்கு நிவாரணப்பொருள்கள் ஏற்றி வரும் பணியில் ஈடுபடும் "லங்கா முடித்", "லங்கா கல்யாணி" ஆகிய இரு கப்பல்களில் நிவாரணப்பொருள்களை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அனுப்பி வருகிறது.

இவ்விரு கப்பல்களும் பழைய கப்பல்களென்பதால் பொருள்கள் ஏற்றி வருவதிலும் தாமதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரு கப்பல்களுக்கும் புறம்பாக வடக்குக்கு பொருள்கள் ஏற்றி வரும் பணியில் ஈடுபடும் 'மாஹோ' 'குமண' கப்பல்களில் வடக்குக்கான பொருள்களை ஏற்றுவதற்கு பாதுகாப்பு இணைப்புக்குழு, துறைமுக அதிகாரசபை, சுங்கத் திணைக்களம், கடற்படை ஆகியன மறைமுகமாக தடைகளை விதித்து வருவதாக கொழும்புத் தக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியிலிருந்து முஸ்லிம்களை வெளியேறுமாறு புலிகள் கூறவில்லை

### தலைமையகம் மறுக்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 19

காத்தான்குடியிலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேறுமாறு விடுதலைப்புலிகள் இயக்கம் கடிதங்கள் மூலம் அறிவித்திருப்பதாக வெளிவந்துள்ள செய்திகளை எமது இயக்கம் வன்மையாக மறுக்கிறது. இந்தச் செய்திகளில் எவ்விதமான உண்மையும் இல்லை.

எமது இயக்கத்தை களங்கப்படுத்தும் விசமத்தனமான நோக்கில் இந்தப் பொய்யான செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது இதுசிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட சதிச் செயல் என நாம் கருதுகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமைச்செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளை முஸ்லிம் மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தி தமிழ் முஸ்லிம் மக்களிடையே முரண்பாட்டையும் கலவரத்தையும் தோற்றுவிக்கும் நோக்கில் இந்த விசமத்தனமான பிரசா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் அபிலாசைக்கு ஏற்ப அவர்களுக்கு தனிமாநிலம் வேண்டும்

### இதுவே புலிகளின் நிலைப்பாடு என்கிறார் திலகர்

லண்டன், ஜூன். 19

சமாதான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமாயின் அப்போது தீர்வுத் திட்டம் பற்றி ஆராயப்படும் பட்சத்தில் முஸ்லிம் மக்களுக்கு அவர்களது அபிலாசைகளுக்கு ஏற்ப தனிமாநிலம் அமைய வேண்டும் என்பதே எமது அமைப்பின் நிலைப்பாடாகும்.

விடுதலைப்புலிகளின் சர்வதேசப்பிரதிநிதி லோறன்ஸ் திலகர் மேற்கண்டவாறு பி.பி.சிக்கு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் பட்சத்தில் விடுதலைப் புலிகளின் 4 அம்சக் கோரிக்கைகளுக்கு முதலில் தீர்வு காணப்படவேண்டும்.

பின்னர் இனப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் பற்றி ஆராயும் போது முஸ்லிம்களின் அபிலாசைக்கு ஏற்ப அவர்களுக்கு தனிமாநிலம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## திரியாய் முகாம் மீது ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 19

கடந்த வெள்ளிக்கிழமை திரியாய் இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விவரம் தெரியவரவில்லை. [ஓ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய் சந்தியில் அமைந்துள்ள வீடு மூன்று கடையுடன் சேர்ந்த 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். தொடர்பு: மு. இரத்தினசபாபதி M. G. M. றைக்கிளினேஸ், இல. 179, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் [8596]

## தேவை

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட துணிப் பதிப்பகத்திற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம் தொடர்பு: அந்திவானம் பதிப்பகம், நாவலர் சாலை [ஐந்துசந்தி], யாழ்ப்பாணம். [37120]

## G. C. E. A/L

க. பொ. த. உயர்தரம் பௌதிக இரசாயனம். ஆக்கம்: ஜே. கே. பி. ஆரியரத்ன. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம் யாழ்ப்பாணம்[.சி-1494]

## புலமைப்பரிசில்

ஆண்டு – 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலங்கை பரீட்சைத் திணைக்கள மாதிரி வினாக்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட முன்னோடிப் பயிற்சி. ஆக்கம். பொன். சக்திவேல், Bright இன் கல்வி வெளியீடு. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம் (சி-1493)

## O/L கணிதம்

ஆசிரியர் சச்சிதானந்தனின் மங்களா கல்விச் சேவை வெளியீடுகளான கட்டிகள் மடக்கைகள், விருத்திகள் புள்ளி விபரவியல், திரிகோண கணிதம், கேத்திர கணித ஒழுக்குகளும் அமைப்புகளும் ஆகிய பகுதிகளில் பகுதி I, II வினாக்களும் செய்கைகளும் விற்பனையாகின்றன (8420)

## SPECIAL ANTENNA

To view Rupavahini, Madras, Programmes Fixing Spcial T. V. Antenna, Repairing Antennas. Radios-T. V Decks, Clocks and Watches Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road (Ariyakulam Junction), Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri. (C-1490)

## கண்டெடுக்கப்பட்டது

கடந்த 4-06-95 அன்று ஒரு சைக்கிள் K. K. S வீதி, தாவடிச் சந்திக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் அடையாளத்தை கூறிப் பெற்றுக் கொள்ளவும். சீக்கோ தாவடிச் சந்தி. (37138)

---

# யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட குருநகர் 17 ஆம் இலக்க சந்தைக்கடை 01 – 07 – 1995 ஆம் திகதி முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவங்களை மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா 100/- ம், மீளப்பெறக்கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபா 2500/- ம் செலுத்தி 28 – 06 – 95 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்

கேள்விகள் 29-06-95 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 00 மணிக்கு முன் யாழ்ப்பாண மாநகர சபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் சேர்க்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை யாழ் மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அறிந்துகொள்ளலாம்.

அட்டவணை

| | குருநகர் சந்தைக் கடை | குத்தகைக் காலம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1 | இல. 17 | 5 வருடம் | 100000/- | ரூ 350 00 |

வே. பொ. பாலசிங்கம்,
ஆணையாளர்.
யாழ். மாநகரசபை.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
1995 – 06 – 16

(சி-1519)

---

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## விசேட அறிவித்தல்

# வியாபார உரிமம் பெறல்

1995ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமம் பெறுவதற்கான காலம் 30 – 06 – 95 வரை நீடிக்கப்படுகின்றது. இத் திகதிக்கு முன்னர் வியாபார நிலையங்களுக்கான உரிமங்களைப் பெறுவதன் மூலம் பின்னர் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வ. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்
1995-06-17

(சி-1518)

---

# கண்டீர்களா?

17-06 95 சனி (கிழமை) காலை பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக நரைநிறமும், வயிற்றுப் பகுதியில் வெள்ளையும், ரோமம் அடர்ந்த வாலும் உள்ள பூனை காணாமல் போய்விட்டது. கண்டவர்கள் தயவு செய்து தகவல் தரவும் பூனை கிடைக்க உதவுபவர்களுக்கு சன்மானம் தரப்படும். முகவரி: S திருநாவுக்கரசு இல: 20, 3ம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (37142)

---

# கேள்வி அறிவித்தல்

## வடக்கு-கிழக்கு மாகாணசபை நிர்மாணத் திணைக்களம்

கீழ் காணும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள நிர்மாணத் திணைக்கள நிறைவேற்று பொறியியலாளரினால் 1995 ஆம் ஆண்டு ஆடி மாதம் 5ஆம் திகதி முற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப் படாத வைப்புப் பணம் | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. கோண்டாவில் மத்திய மருந்தக திருத்த வேலை | 250/- | 750/- |
| 2. கோப்பாய் வைத்தியசாலை திருத்த வேலை | 250/- | 750/- |
| 3. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை திருத்த வேலை | 250/- | 750/- |
| 4. கொடிகாமம் மத்திய மருந்தக திருத்த வேலை | 100/- | 500/- |
| 5. கரவெட்டி மத்திய மருந்தக திருத்த வேலை | 100/- | 400/- |

குடிசார் வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய தரம் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் நிர்மாண பயிலுனர் அபிவிருத்தி நிறுவனத்தில் (I C T A D) பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் இக் கேள்விகளுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோராவார்.

வேலைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட வைப்புப் பணங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் 30 ஆம் திகதி ஆனி மாதம் 95ஆம் ஆண்டு நண்பகல் 12-00 மணி வரை செலுத்தி கேள்வி பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்க முடியும். அத்துடன் விபரங்களை காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி சு. சுந்தரகுமார்,
நிறைவேற்று பொறியியலாளர்,
நிர்மாணத் திணைக்களம், வடமாகாணம்

நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம்,
நிர்மாணத் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
19 – 06 – 1995

[சி-151…]

---

# 1995/96 காலபோக விதை உருளைக்கிழங்கு பெறுவதற்கான விண்ணப்பம்

1995 / 96 காலபோகத்தில் இறக்குமதி செய்யப்படவுள்ள விதை உருளைக்கிழங்கு சென்ற ஆண்டை விட அரை மடங்காக குறைக்கப்படவுள்ளதால் கிழங்கு பயிரிட உள்ள விவசாயிகள் தமக்கு தேவையான விதை உருளைக்கிழங்கினை பெற்றுக்கொள்வதற்கு இலகுவாக அதற்குரிய விண்ணப்பப் படிவங்களை தங்கள் உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள கமநல வேளாண் சேவை நிலையங்களில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 15 – 07 – 1995 இற்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மத்திய வேளாண் நலச்சேவைகள்
விவசாயப் பகுதி,
த. பொ. மே. நிறுவனம்,
தமிழீழம்.

குறிப்பு:
உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளின் நலன் கருதி தனிப்பட்ட முறையில் வடபகுதிக்கு வெளியில் இருந்து விதை உருளைக்கிழங்கு கொண்டு வரப்பட்டு நடுகை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறும் விவசாயிகள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[சி-1515]

---

# ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02 – 01 – 1960

மறைவு: 19 – 06 – 1993

## திருமதி ஜஸ்ரின் சிறில் டொறத்தி

உன் நினைவு எம் மனதில் தோன்றி ஈராண்டானது
உன் மதிமுகம் கண்முன் காவியமாகி இன்று கோனல் நீரானது
உன் ஈடில்லா இழப்பு
எம்மில் ஈட்டிபோல் பாயுதம்மா
உன் அன்புக்கு ஈடில்லை இங்கு
உலகமே திரண்டாலும் அம்மா,
உன் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

உன் நினைவால் வாடும்,
சிவனடியார் குடும்பத்தினர்

"டொறனிவாசா",
கடற்கரை வீதி,
பருத்தித்துறை

[37097]

---

# 16ஆவது ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி இராசமணி மகேசன்

தோற்றம்: 02 – 02 – 1909

மறைவு: 19 – 06 – 1979

என்றும் அன்பு மறவாத

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
[illegible], நண்பர்.

[illegible]

(8591)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## சதாசிவம் கஜேந்திரன்

### மேஜர் தொண்டமான்

(பலாலி மத்தி, வசாவிளான்)

வீர ஜனனம்: 08 – 01 – 1971

வீர மரணம்: 30 – 06 – 1994

திதி 19 — 06 — 1995

ஓராண்டு கழிந்தின்று ஒப்பில்லா முன்னணிச்
சீராளர் நாமெலாம் ஒரு நோக்கும் ஓரிலக்கும்
பேராயிரம் பேராகத் திரண்டு நம்
நேரான பழம் பதியை நேர்த்தியாய் காப்போமே.

— குடும்பத்தினர்,

கோப்பாய் தெற்கு.
கோப்பாய்.

(37136)

---

31ஆம் நாள்

# நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி நாகரத்தினம் இராசையா

தோற்றம்: 17 – 02 – 1917

மறைவு: 21 – 05 – 1995

திதி: 19 — 06 — 1995

பாசத்தைப் பொழிந்து தன் உயிருக்கு மேலாக – எம்மை
காத்து ஆளாக்கிய அம்மாவே-
மாதம் ஒன்று சென்றதம்மா உங்கள் ஆசைமுகம் – பார்த்து
உற்றதுணை உங்களைப் போல் கிட்டுமோ– எங்களுக்கு
உங்களது திடீர் மறைவை நாங்களும்,
உங்களைச் சார்ந்தவர்களும் மறக்க முடியாமல் – வெதும்புகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எங்கள் வாழ்நாள் முழுவதும் இறைஞ்சுகிறோம்.

இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆனைக்கோட்டை சந்திக்கருகாமை,
ஆனைக்கோட்டை.

[37134]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இலங்கையில் இந்தியா

இலங்கை இனப்பிரச்சினையில், இந்தியா அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமே அன்றி, மீண்டும் யுத்த ரீதியாக அதில் இறங்கிவிடக் கூடாது; ஏற்கனவே பட்டது போதும்.

இவ்வாறு இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளரும் இந்தியாவின் இலங்கைத் தூதராக இருந்தவருமான ஜே. என். டிக்ஸித் தெரிவித்திருக்கிறார்.

தமிழர் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காண்பது என்ற பெயரளவிலான முயற்சியைக் கைவிட்டு, போரை நடத்தி அதில் வென்ற பின்னரே, அரசியல் தீர்வு குறித்து ஆராய்வது என்ற புதிய நிலைப்பாட்டுக்கு ஜனாதிபதி சந்திரிகா வந்திருக்கிறார்.

அதேவேளை, அரசாங்கப் படைகள் போரில் வெல்வதானால், வெளிநாட்டு இராணுவ உதவி தேவை என்பதனையும் சந்திரிகா நன்றாக உணர்ந்துள்ளார். அதனால் பல வெளிநாடுகளிடம் இராணுவ உதவி கேட்டிருக்கிறார். இந்தியாவின் உதவியை பெருமளவில் நாடியுள்ளார்.

விடுதலைப் புலிகள் விமானங்களையும் தாக்கும் சக்தி பெற்றிருப்பதை இந்தியா தனக்கும் ஆபத்தாகக் கருதுகிறது. இதற்கு மத்தியில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனை தன்னிடம் ஒப்படைக்குமாறு இந்தியா ஸ்ரீலங்காவிடம் உத்தியோக பூர்வமாகக் கேட்டிருக்கிறது.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தமது உள்நாட்டு அரசியல் லாபம் கருதியே இத்தனை வருடங்களுக்குப் பின்னர் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்புமாறு கேட்டிருப்பினும் கூட—

இன்றைய சூழ்நிலையில் இது, மிகுந்த சிக்கலையும், தேவையற்ற ஒரு நெருக்கடியையும் உருவாக்கியிருக்கிறது. இந்தியாவின் கோரிக்கை குறித்த தனது நிலைப்பாட்டை ஸ்ரீலங்கா அரசு ஆக்குறைந்தது இன்னும் இரண்டு வாரங்களில் தெரியப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய பின்னணியில், இந்தியா தனது துருப்புகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்புமா என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது; அது சாத்தியமானதே என்ற கருத்துக்கும் இடமளிக்கிறது.

இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப்முகர்ஜி 'டைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில், இலங்கையில் இந்திய இராணுவத் தலையீடு இருக்காது என்பதனைத் திட்டவட்டமாகக் கூறுவீர்களா எனக் கேட்டதற்கு—

''மிகவும் சாதகமான முறையில் நான் இதனைத் தெரிவிக்க மாட்டேன்; இலங்கை இது பற்றிக் கேட்டுக் கொள்ளாதபடியால் இது குறித்துக் கேள்வி எழவில்லை'' என்று கூறியிருப்பதும் இந்தியா இராணுவ ரீதியாக இலங்கை விடயத்தில் தலையிடக்கூடும் என்ற எண்ணத்தைத் தோற்றுவிப்பது உண்மையே.

ஆனால் இந்தியா, இலங்கை விடயத்தில் மறுபடியும் இராணுவ ரீதியாகத் தலையிடக்கூடாது என்று டிக்ஸித் கூறும் கருத்தே அந்நாட்டில் பரவலாக நிலவுகிறது. முன்னர் பெற்ற அனுபவமும், கிடைத்த அவமானமும் இந்தியாவை மீண்டும் இராணுவ ரீதியாக தலையிடாது தடுக்கும் என்று பெருமளவில் நம்பலாம்.

தமிழர் தரப்புக்குக் கடல் வழியாக ஆயுதங்கள் வருவதை தடுத்தல், அது தனது வான் படையை வளர்க்க விடாமல் தடுத்தல் ஆகிய அம்சங்களில் இந்தியா இலங்கைக்கு உதவும் என்பதில் சந்தேகமில்லை.

விடுதலைப் புலிகள் விவகாரம் இனியும் தனிய ஸ்ரீலங்காவினது பிரச்சினையல்ல; அது இந்திய எல்லை வரைக்கும் அக்கறை உடைய விவகாரமாகிவிட்டது! என்று கூறி, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக படைகளைத் தருவிப்பது தவிர்ந்த ஏனைய எல்லா உதவிகளையும் இந்தியாவிடமிருந்து ஸ்ரீலங்கா பெற்றுக் கொள்ளும் என்பதும் நிச்சயம்.

# வடக்கு - கிழக்கு பகுதிக்கு இடைக்கால நிர்வாக சபை

## ஜனாதிபதி தலைமையில் வியாழனன்று மாநாடு

கொழும்பு, ஜூன் 19

வடக்கு — கிழக்கு மாகாணத்துக்கு மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய இடைக்கால நிர்வாகசபை ஒன்றை அமைப்பது குறித்து ஆராய அப்பகுதி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் எம். பிக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எதிர்வரும் வியாழக்கிழமை மாநாடொன்றுக்கு அழைத்துள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ. பி. டி. பி), தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், பொது மக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, (புளொட்), ஆகிய கட்சிகளைச் சேர்ந்த எம். பிக்களே மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான அழைப்புக் கடிதங்களை ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்ட பெண்டி எம். பிக்களுக்கு அனுப்பியுள்ளார். (ஐ)

### அதிபர் கூட்டம்

தென்மராட்சி, ஜூன் 19

தென்மராட்சி கோட்டப் பாடசாலை அதிபர்கள் சங்க விசேடப் பொதுக்கூட்டம் இன்று திங்கள் பிற்பகல் 3-00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் சங்கத் தலைவர் சி. துரைராசா தலைமையில் நடைபெறும். (க-117)

## பிரான்ஸ் தூதரகம் முன் தமிழ் பெண்ணிடம் திருட்டு

கொழும்பு, ஜூன் 19

வெளிநாடு செல்வதற்கான ''ஸ்பொன்சர்'' கடிதத்துடன் கொழும்பில் உள்ள பிரெஞ்சுத் தூதரகத்துச் சென்ற இளம் தமிழ் பெண் ஒருவர், சுமார் இரண்டரை பவுண் எடையுள்ள தனது இரண்டு தங்க வளையல்களை ஏமாற்றுப் பேர்வழியிடம் பறிகொடுத்தார்

சம்பவம் பற்றிக்கூறப்படுவதாவது:-

பிரஸ்தாப பெண் திருமணமாகி ஆறு மாதங்கள்தான். இவரின் கணவர் வெளிநாட்டில்

சம்பவதினம் பிரஸ்தாப பெண் தூதரக விஸா அதிகாரியைச் சந்தித்தபோது மற்றொரு தினத்துக்கு அழைப்பதாகவும் அழைக்கும் போது ''ஸ்பொன்சர்'' கடிதத்தை எடுத்து வருமாறும் தெரிவிக்கப்பட்டதாம்.

ஏமாற்றத்துடன் தூதரகத்துக்கு வெளியே வந்த பெண்ணை நெருங்கிய ஒரு ''ரிப்ரொப்'' பேர்வழி பிரபாகரனை நாடு கடத்தி இந்தியாவுக்கு அனுப்புமட்டும் விஸா கொடுக்க மாட்டார்கள் என்றாராம்.

காசு கொடுத்தால் விஸா எடுக்கலாம் என்று அந்தநபர் கூறவே தம்மிடம் 1500 ரூபா மட்டுமே இருப்பதாக அப்பெண் பதிலளித்தார்.

அப்படியானால் நகையை அடகு வைத்தாவது பணம் தாருங்கள் என்று அந்த நபர் கூறியபோது, பிரஸ்தாப பெண் நம்பிக்கையில் தனது இருதங்க வளையல்களையும் கழற்றி அடைவு வைக்கக் கொடுத்தராம்

அடைவு வைத்துப்பணம் பெற்றுவருவதாகக் கூறித் தங்க வளையல்களுடன் சென்ற அந்த ஏமாற்றுப் பேர்வழி பின்னர் திரும்பியே வரவில்லையாம். (இ)

## யாழ். ஆஸ்பத்திரிகளுக்குரிய டீசலை கப்பலில் ஏற்ற துறைமுகத்தில் மறுப்பு!

யாழ்ப்பாணம், ஜூன். 19

யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகள் மற்றும் திணைக்களங்களுக்குத் தேவையான டீசலை கப்பலில் ஏற்ற துறைமுக அதிகாரசபை மறுத்துள்ளதாக கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது;

யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கும், அரச திணைக்களங்களுக்கும் மாதாந்தம் டீசல் கோட்டாவாக அரசு வழங்குகிறது. அந்த டீசலை தற்போது கொழும்பில் தரித்து நிற்கும் ''மாஹோ'' கப்பலில் ஏற்றுவதற்கு பாதுகாப்பு இணைப்புக்குழுவும், கடற்படையும் அனுமதி வழங்கி இருந்தது.

அதை அடுத்து டீசலை கப்பலில் ஏற்றுவதற்கு அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை துறைமுகத்துக்குச் சென்றனர்.

ஆனால் டீசலை கப்பலில் ஏற்ற துறைமுக அதிகார சபையினர் மறுத்து விட்டதாக கொழும்பு தகவல் தெரிவித்தது. (ஒ-3)

## வடக்கே உரம் அனுப்பவும் அரசு பல கட்டுப்பாடுகள்

### மாஹோ வருவது தாமதமாகும்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். மாவட்டத்துக்கு உரம் அனுப்பவும் அரசு பல கட்டுப்பாடுகளை விதிப்பதாக கொழும்பு தகவல்ஒன்று தெரிவித்தது

தற்சமயம் கொழும்பில் தரித்து நிற்கும் ''மாஹோ'' கப்பலில் ஆயிரத்து 500 மெற்றிக்தொன் உரத்தை ஏற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும்—

அதை அடுத்து யாழ். கமநல சேவைத் திணைக்கள அதிகாரிகள் உரத்தைக் கொள்வனவு செய்து கப்பலில் ஏற்ற ஏற்பாடுகள் செய்த சமயம் புதிய கட்டுப்பாடுகளை அரசு தெரிவித்ததாகவும்—கொழும்பு தகவல் மேலும் தெரிவித்தது.

அந்தஉரத்தில் யூரியா இருக்கலாம் என்ற சந்தேகத்தில் உரத்தை பகுப்பாய்வுப் பிரிவில் கொடுத்து சோதனை செய்யவேண்டும் என்றும்—

உரக்கூட்டுத்தாபனத்திடம் மட்டுமே கொள்வனவு செய்ய வேண்டும் என்றும்— தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ''மாஹோ'' கப்பலில் பொருள்களை ஏற்றுவது தாமதமாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## லயன்ஸ் கழக ஆதரவில் நடைபெற்ற கண் சிகிச்சை

தென்மராட்சி, ஜூன் 19

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் கடந்த ஆண்டு நிர்வாக காலத்தில் தென்மராட்சி பகுதியில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஆயிரத்து 913 பேருக்கு இலவச கண் பரிசோதனை 13 கண் சிகிச்சை முகாம்களில் நடத்தப்பட்டது.

இவர்களில் 989பேர் தெரிவு செய்யப்பட்டு 589 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. மேலும் 23 மாணவர்களுக்கும் மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது

கற்றாக் எனப்படும் கண்ணின் பூப்படலம் பாதிக்கப்பட்ட 180 பேரில் 60 பேருக்கு யாழ். போதனா வைத்திய சாலை கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாஸனால் கண் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. அத்துடன் 120 பேருக்கு கண் மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

கண் சத்திர சிகிச்சை செய்யப்பட்டவர்களில் பத்துப் பேர் வடமராட்சியைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

மேலும் சுமார் இரண்டாயிரம் பேருக்கு இக் காலப் பகுதியில் சலரோகம், இரத்த அழுத்த பரிசோதனைகளும் நடத்தப்பட்டதாக சாவகச்சேரி லயன்ஸ் கழக மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் லயன். எஸ். [illegible]னம் தெரிவித்தார். (க-117)

## கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு அஷ்ரப், டக்ளஸ் அடங்கிய செயலணி!

### அரசு நியமித்தது

கொழும்பு, ஜூன் 19

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கென்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும். அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் தலைமையில் விசேட செயலணிக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

பொது நிர்வாக பெருந்தோட்டத் தொழில்துறை, நாடாளுமன்ற விவகார அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா, கொள்கைத் திட்டமிடல், தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, தபால் தந்தி தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர் எம் எல். ஏ. எம். ஹிஸ்புல்லா, ஈ. பி. டி பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா திசமடுல்ல மாவட்ட எம். பி விரசிங்க ஆகியோர் இந்த விசேட செயலணியின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

### அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு 'ஹறுண' கப்பலில் 4 ஆயிரத்து 353 தேசிய அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன. இவற்றை தரம் பிரிக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அடுத்த வாரத்தில் இந்த அடையாள அட்டைகள் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகள் கிராம சேவையாளர்களிடம் அடுத்தவார பிற்பகுதியில் அவற்றைப்பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பதிவுத் தபாலில் அனுப்புவதற்காக 8 ரூபா முத்திரை ஒட்டி அனுப்பிய விண்ணப்பதாரிகளின் அடையாள அட்டைகளும் பிரதேச செயலகங்களுக்கே அனுப்பி வைக்கப்படவுள்ளன. பதிவுத் தபால் முத்திரைக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமையே இதற்கான காரணமென்று தெரியவருகிறது பாடசாலை மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளும் அதிபர்கள் ஊடாக அடுத்த வாரம் அனுப்பி வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (க-4)

### புலிகளின் குரல் வானொலியில்

19 06 1995

திங்கள் இரவு

- ★ 8-02 — தளிர்கள்— சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20 — சமகாலப் பார்வை
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தரிசனம்— கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு எஸ். தில்லை நடராஜாவுடனான செவ்வி

20 — 06 — 1995

செவ்வாய் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — தாயகப் பாடல்கள்

### தமிழீழ வானொலியில்

19 — 06 — 1995

திங்கள் மாலை

- ★ 5-01 — சிந்தனைச்சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — ஆழியமுதம்
- ★ 5-30 — மாணவர் பக்கம்
- ★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
- ★ 6-0[illegible] — [illegible]
- ★ 6-15 — விளையாட்டுச் [illegible]
- ★ 6-20 — என் தெரிவு

## பாடசாலையில் புகைத்தல் மது அருந்துதலுக்கு தடை

கொழும்பு, ஜூன் 19

பாடசாலை எல்லைக்குள் புகைத்தல் மதுபானம் அருந்துதல் ஆகியவற்றை தடை செய்யும் சுற்றறிக்கை ஒன்றை கல்வி உயர்கல்வி அமைச்சின் போதைப் பொருள் தடுப்புக் கல்விப் பிரிவு நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

மாணவர்களைக் கொண்டு போதைப் பொருள்களையோ சிகரெட்டையோ வாங்குவிப்பதகும் பாடசாலை போசன சாலைகளில் இவற்றை விற்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை வளவில் நடைபெறும் எந்த ஒரு வைபவத்திலும் கலந்து கொள்ளும் மாணவர்கள், ஆசிரியர், பெற்றோர், வெளியார் எவருக்கும் இவற்றை பாவிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளினுள் புகைத்தல், மது அருந்துதலை தடை செய்யும் விளம்பரப் பலகைகளை தொங்கவிட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-14)

## வாகனேரியில் ஷெல் வீச்சு! இளைஞன் உடல் சிதறி பலி!!

கொழும்பு, ஜூன் 19

மட்டக்களப்பு மாவட்டம் வாகனேரியில் வீடு ஒன்றின் மீது படையினர் ஏவிய ஷெல் விழுந்து வெடித்ததில் இளைஞர் ஒருவர் பலியானார்.

கந்தையா புவேந்திரராசா (வயது 16) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த வியாழனன்று இரவு இச்சம்பவம் இடம்பெற்றது

வீட்டில் இந்த இளைஞன் படுத்திருந்த இடத்துக்கு அருகே ஷெல் விழுந்து வெடித்தது. அதனால் அந்த இளைஞர் உடல் சிதறிப் பலியானார்.

வீட்டில் இருந்த பலர் காயமடைந்தனர் (ஐ)

## கிரான் காட்டுப் பகுதியில் பெரும் படை நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரானுக்கு மேற்கே உள்ள பெண்டுகள் சேனை, தரவை, கூழாவடி ஆகிய காட்டுப் பகுதிகளில் படையினர் கடந்த வெள்ளி காலை முதல் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இராணுவ முகாம்களில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான படையினர் வாகனங்களிலும், கால்நடையாகவும் காடுகளை நோக்கிச் சென்றனர்.

செங்கலடி பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 10 உழவு இயந்திரங்களை இராணுவத்தினர் தமது பாவனைக்காகக் கொண்டு சென்றுள்ளனர்.

இந்த உழவு இயந்திரங்கள் இராணுவத்தினரை ஏற்றிக் கொண்டு காட்டுப் பகுதிக்குள் சென்றன.

கிரானுக்கு மேற்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இந்த படை நடவடிக்கைக்கு புலி பாய்ந்த கல் படை முகாமே பிரதான தளமாக இருந்து வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன. [ஐ]

## மாணவர் அறிவியல் கழக அறிவியல் வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

மாணவர் அறிவியல் கழகம் வாரம்தோறும் நடத்திவரும் அறிவியல் வகுப்புக்களின் தொடரில் இவ்வாரம் நடைபெறவுள்ள வகுப்புக்களின் விவரம் வருமாறு:

திங்கள்

மு. ப 9.30 மணி— 2-00 மணிவரை ஆண்டு 10 கட்டுவன் புலம் மகா வித்தியாலயம் விஞ்ஞான செயன்முறை வகுப்பு, மூலர்க்கரைசல் தயாரித்தல் தவளை வெட்டி பரிசோதிப்பு குருதி மாதிரி அவதானிப்பு இதயம் அவதானிப்பு.

ஆண்டு 08 மாட்டுக்கண் வெட்டி அவதானிப்பு, உணவு பரிசோதனை, குளுக்கோஸ் மாப்பொருள், புரதம், கொழுப்பு.

★ பி.ப 3.00மணி— 4 00 மணிவரை ஆண்டு 09 கணித செயல்முறை வகுப்பு 'வினா விடை'.

பி. ப. 3.30 மணி— 4.30 மணிவரை ஆண்டு 10 விஞ்ஞான செயன்முறை வகுப்பு நீயனை கருவியை பார்வையிடலும், அதன் தொழிற்பாட்டை அறிதலும்.

★ பி. ப. 4 00 மணி— 5 00 மணிவரை ஆண்டு 11 கணித செயன்முறை வகுப்பு, பெருக்கல் விருத்தியின் தொடர்ச்சி.

★ பி. ப. 5. 30 மணியிலிருந்து 6. 30 மணிவரை ஆங்கில வகுப்பு

செவ்வாய்

★ மு. ப 9 30 மணி— பி. ப. 2. 00 மணிவரை கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்— ஆண்டு 11 விஞ்ஞான செயன்முறை வகுப்பு - குளோரின் வாயு தயாரித்தலும் அதன் இயல்புகள், பயன்கள் அறிதல் முளையின் மாதிரி அமைப்பினை பார்வையிடுதல் அறிவியல் சார்ந்த ஒளிப்படம் பார்வையிடல்.

★ பி. ப. 3. 30 மணி— 4. 30 மணிவரை ஆண்டு 08 கணித செயன்முறை வகுப்பு ''குறியீடுகளும் அதன் பிரதியீடுகளும்''

புதன்

★ மு. ப. 9-30மணி— பி. ப. 2-00மணிவரை மருதங்கேணி மகா வித்தியாலயம் விஞ்ஞான செயன்முறை வகுப்பு

★ பி. ப. 3-00மணி 4-00 மணிவரை அறிவியல் ஒளிப் படக்காட்சி

★ பி ப.4-00மணி—5-00 மணிவரை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல்

★ பி.ப.5-00மணி—மணி 6-00மணிவரை ஆராய்ச்சியின் அடிப்படை என்ற தலைப்பிலான ''சக்தி'' பெறப்படும் வழிகள் பற்றியவிளக்க வகுப்பு

வியாழன்

★ மு. ப. 9-30மணி— 2-00மணிவரை ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம் ஆண்டு 10, 11 விஞ்ஞான செயன்முறை வகுப்பு—மின்னின் விளைவுகள், மின்னின் வெப்பவிளைவு, மின்னின் இரசாயன விளைவு மின்னின் காந்த விளைவு, மின்னியல் ஓமின் விதியை வாய்ப்பு பார்த்தல், வெப்பம் தன் வெப்பக் கொள்ளளவு துணிதல்

★ பி.ப.4-00மணி—5-00 மணிவரை ஆண்டு 08 விஞ்ஞான செயன்முறை வகுப்பு ஞாயிற்றுதொகுதி மாதிரியுரு அமைத்தல்

வெள்ளி

★ பி.ப.3-30மணி—4-30 மணிவரை ஆண்டு 11 விஞ்ஞான செயன்முறை வகுப்பு ''மின்னின் இரசாயன விளைவுகள் ஆண்டு 10கணித செயன்முறைவகுப்பு தொடைகளின் தொடர்ச்சி

சனி

★ பி.ப 3-30மணி—4-30 மணிவரை ஆண்டு 09விஞ்ஞான செயன்முறை வகுப்பு அமிலங்களையும் அமில ஒட்சைட்டுகளையும் இனம் காணல்.

### ஓய்வூதியர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவுக் கணக்காளர் திரு கா. வீரசிங்கம் கலந்து கொள்வார். [க-14]

### நூல்கள் வெளியீடு

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் செயலகம் கடந்த 9ஆம் திகதி மானிப்பாய் மெமோறியல் ஆங்கில கல்லூரியில் நடத்திய உலக சூழல், சுற்றாடல் தின விழாவில் மூன்று நூல்கள் வெளியிடப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டன.

பிரதேச செயலரும், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான திரு. து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 'சூழல் சுகாதாரமும் நாம் செய்ய வேண்டியவைகளும்', 'மலேரியா நோய்', 'காசநோய்' ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன. (க-135)

### ஆலயங்களில்

அளவெட்டி அழுக்கை நாவலடி ஞான வைரவர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை அதிகாலை 6 மணிக்கு நடைபெறும். (க-51)

★ ★ ★

யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் ஜூலைமாதம் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-14)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 19

புதிய ஆசிரியர் சேவைச் சம்பளத்திட்டமும் உத்தேச கல்வி நிர்வாக அமைப்பும் என்னும் தலைப்பில் இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க புங்குடுதீவு — வேலணைக் கிளைகள் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வித்தியாலயத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வேலணைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. நடேசபிள்ளை கலந்துகொள்வார். [க-14]

### முடிவு திகதி நீடிப்பு

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு இம்மாதம் 23 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என்று கல்வி உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது

இம்மாதம் 13 ஆம் திகதி விண்ணப்ப முடிவு திகதியாக இருந்த போதிலும் பல பாடசாலைகளில் இருந்து விண்ணப்பங்கள் கிடைக்காததால் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் —

இனிமேல் எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது என்றும் அமைச்சு அறிவித்தது. [அ]

### யாழ். மாநகர வீடுகளில் விவரம் சேகரிப்பு

கொழும்புத்துறை, ஜூன் 19

யாழ். மாநகரசபை ஊழியர்கள் மாநகர வீடுகளுக்குச் சென்று குடிசன மதிப்பீடும் மின்சார விவரமும் சேகரித்து வருகின்றனர்.

இவர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும்படி வீடுகளில் உள்ளவர்கள் கேட்கப்படுகின்றார்கள். (க-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லம்மா நல்லதம்பி

[காரைநகர்]

காலஞ்சென்ற முருகேசு நல்லதம்பியின் அன்பு மனைவி நல்லம்மா காரைநகரில் 15-06-1995 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16-6-95 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. வேலுப்பிள்ளை
குடும்பத்தினர்

இல. 6 - 4ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

[37141]

## திருமதி நாகராஜேஸ்வரி இராமசுவாமி

(அளவெட்டி)

அளவெட்டி திருமதி நாகராஜேஸ்வரி தெகிவளையில் 16-06-95 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார். இவர் முன்னைநாள் மகாஜன கல்லூரி ஆசிரியரும், முன்னைநாள் வசாவிளான் மகாவித்தியாலய அதிபருமான மாரீசன் கூடல் ஆறுமுகம் இராமசுவாமியின் அன்பு மனைவியும், திருமதி வாசுகி யோகவரன் (அவுஸ்திரேலியா), செல்வி வானதி இராமசுவாமி ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், யோகவரனின் [அவுஸ்திரேலியா] மாமியாரும் செல்வன் சுதர்சனின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 18-06-95 தெகிவளை இல 20, இன்னார் பெ[F]யர்லைன் றோட், தெகிவளையில் நடைபெற்று தெகிவளை மயானத்தில் தகனம் செய்யப்பட்டதென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்;
திரு செல்வநாயகம்.

இல, 60 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

[37139]

## சுப்பிரமணியம் சண்முகராஜா

(பாபு மாஸ்டர்)

(இளைப்பாறிய ஆசிரியர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

இளவாலையைப் பிறப்பிடமாகவும், வயாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகராஜா 17-6-1995இல் காலமானார்.

அன்னார் மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், தாமோதரம்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கணேசன் ராஜ் [லண்டன்], ஞானலிங்கம் [லண்டன்], கலைவாணி, ஐங்கரன் ஆகியோரின் அருமைத் தந்தையும், நோயல் மணிமாறன் [ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி] அவர்களின் அன்பு மாமனாரும், அஞ்சலோ கிறிஷாந்தின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-6-95) திங்கட்கிழமை மு. ப. 10-00 மணியளவில் கல்வளை சண்டிலிப்பாயில் உள்ள அவரது தற்காலிக இருப்பிடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கம்புலோ மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:
மங்களேஸ்வரி
[மனைவி]

கல்வளை,
சண்டிலிப்பாய்.

[37135]

## செல்வி சைலறஞ்சனா கைலயங்கிரிநாதன்

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சைலறஞ்சனா கைலயங்கிரிநாதன் (வயது 19) 18-6-1995 காலை காலமானார்.

அன்னார் கைலயங்கிரிநாதன் மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புப் புதல்வியும் விஜிதரன், ரஜனிகாந், குலறூபா, முரளிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், C. T. செல்வராஜா (திருச்செல்வம்), கண்மணி, தம்பியையா (உருத்திரபுரம்), காலஞ்சென்ற அன்னபூரணி, V. N. செல்வராஜா ஆகியோரின் பேத்தியும், கந்தசாமி. ஜெயம், இலட்சுமிகாந்தன், நரேந்திரன், கிருஷ்ணமூர்த்தி, செல்வமணி ஆகியோரின் பெறாமகளும், C. T. மகாதேவன், காலஞ்சென்ற உமைபாலன், சௌந்தரராஜன் (பிரான்ஸ்), ஸ்ரீகாந்தன் [ஜேர்மனி], உத்தமசீலன் (கனடா), கலா, ராணி ஆகியோரின் மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20-06-1995 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் சண்டிலிப்பாய் V. N. செல்வராஜாவின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்;
C. T. மகான்

V. N. செல்வராஜா,
சிரணி சந்தி,
சண்டிலிப்பாய்.

(37138)

## இராசலிங்கம் ஸ்ரீரங்கன்

(வீரவேங்கை நீலவண்ணன்)

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான இராசலிங்கம் ஸ்ரீரங்கன் 17-6-95 இல் வீரச்சாவடைந்துவிட்டார்.

அன்னார் இராசலிங்கம் - மகாராணியின் அன்பு மகனும், ஸ்ரீரஜனி, ஸ்ரீலக்சாயினி, ஸ்ரீவெங்கடேசன், ஸ்ரீமாலினி, ஸ்ரீரமணா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஆறுமுகம், அமராவதி, காலஞ்சென்ற நாகலிங்கம், மற்றும் லெட்சுமி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நயினை சுந்தரலிங்கம், மற்றும் சாந்தலிங்கம் [தலைவர், வர்த்தகசங்கம், பாசையூர், கொழும்புத்துறை, மணிப்புரி], சண்முகலிங்கம், பஞ்சலிங்கம், அமிர்தலிங்கம், கனகாம்பிகை ஆகியோரின் அன்பு பெறாமகனும், கனகலிங்கம் [வர்த்தகர், கச்சேரி கிழக்கு ஒழுங்கை] அவர்களின் மருமகனும், ஆவார்.

துக்கநிகழ்வு இன்றும் நாளையும் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. சாந்தலிங்கம்
[சிறிய தந்தை]
[தலைவர் வர்த்தக சங்கம் பாசையூர்,
கொழும்புத்துறை, மணிப்புரி]

12/3, சந்தனமாதா கோவில் வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

[37144]

# எல்லாளன் படையின் எச்சரிக்கை பாரதூரமான ஒன்றல்லவாம்

கொழும்பு, ஜூன் 19

எல்லாளன் படை உல்லாசப் பயணிகளுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை பாரதூரமான ஒன்றல்ல. அது ஒரு தனிப்பட்ட சம்பவம் மட்டுமே — என்று இலங்கை வரும் உல்லாசப் பயணிகள் வாழும் நாடுகளுக்கு இலங்கை அறிவித்துள்ளதாக— வெகுஜனத் தொடர்பு உல்லாசப் பிரயாண விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கா குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து உல்லாசப் பயணிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கைகள் குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என கேட்கப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அமைச்சர். —

பிராங்போர்ட், லண்டன் மற்றும் பிரதான நகரங்களுக்கு இலங்கையின் நிலை பற்றி தெளிவாக அறிவிக்கப் பட்டுள்ளது என்றும் உல்லாசப் பயணிகள் இங்கு வருவதற்காக செய்யப்பட்ட ஒடர்கள் எவையுமே ரத்துச் செய்யப்படவில்லை என்றும்— தெரிவித்தார். (ஒ-14)

## அனல் காற்று வீசுவதால் இந்தியாவில் 470 பேர் பலி

புதுடில்லி, ஜூன் 19

இந்தியாவில் மோசமான வெப்பம்காரணமாகவீசிவரும் அனல் காற்றினால் கடந்த 15 நாட்களில் மட்டும் 470 பேருக்கு மேல் மரணமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பலகிராமங்களில் இடம்பெற்ற மரணங்கள் பற்றி அறிவிக்கப்படாமையால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டதைவிட இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், மத்திய பிரதேசம், டில்லி, ஹரியானா ஆகிய பகுதிகளிலேயே அனல் காற்று வீசி வருகின்றது.

உத்தரப் பிரதேச வாரணாசிப் பகுதி மக்களை பகலில் வெளியே நடமாட வேண்டாம் எனவும் மாநில மக்கள் பகலில் வெறும் வயிற்றுடன் நடமாடுவது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் பானங்களை அதிக அளவில் பருகும்படியும் மாநில சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தி உள்ளது.

இதே வேளை மேற்குவங்காளம், அஸாம் பகுதிகளில் பெய்துவரும் கடும் மழையினால் அங்கு பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

வெள்ளத்தினால் 2 லட்சத்துக்கும் அதிகமானோர் தமது வீடுகளை இழந்துள்ளனர். [ஒ-14]

## காத்தான்குடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரத்தை அரசாங்கமே முடுக்கி விட்டிருக்கிறது.

தமிழ செறியில் கிழக்கு மாகாணத்தின் கட்டுப்பாட்டை இழந்து வரும் அரசாங்கம், நிலைமையைத்திசை திருப்பும் நோக்குடன் மிகவும் அபாண்டமான பழியை புலிகள் மீது சுமத்த முனைகிறது.

முஸ்லிம் மக்களின் விரோதியான இஸ்ரேலுடன் ராஜரீக உறவுகளை ஏற்படுத்த அரசாங்கம் செய்துள்ள முடிவு இஸ்லாமியரிடையே பலத்த எதிர்ப்பை தோற்றுவித்திருக்கிறது. இதனால் விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு சார்பாக முஸ்லிம் மக்களிடையே ஆதரவும் பெருகி வருகிறது.

இந்தப் புதிய திருப்பத்தை பொறுத்துக்கொள்ள முடியாத சந்திரிகா அரசும் அதற்கு சார்பான சக்திகளும் முஸ்லிம் மக்களை விடுதலைப் புலிகளுக்கும் தமிழர்களுக்கும் எதிராகத் தூண்டி விடும் நோக்கில் இந்தப் புரட்டுச் செய்தியை கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. அரசாங்கத்தின் இந்த கபட நோக்கம்குறித்து முஸ்லிம் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளுகிறோம். —என்று உள்ளது. (ஒ)

## விளையாட்டு நிகழ்வுகள்

காங்கேசன்துறை யங் றோயல் விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3-00 மணி:- ஞானமுருகன் வி. க. எதிர் உரும்பராய் வி. க.

★ 4-00 மணி:- ஊரெழு றோயல் வி. க. எதிர் பல்கலைக்கழகம் [கோகிடிஷ்]

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4-00 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் இளங்கோ அணியை எதிர்த்து வைத்தீஸ்வரா அணி மோதும்

## சேவாச்சிரம வெள்ளி விழா

யாழ்ப்பாணம், ஜூன் 19

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் வெள்ளிவிழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு, கற்கோவளம் மெதடிஸ் தமிழ்க் கலவன் பாடசாலையில், அதிபர் திரு. கெ. தங்கராசா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வீ. ரி. செல்வரத்தினம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

விழாவில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான துணிவகைகள் 84 மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்படும். [க-5]

## கப்பலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கத்தைத் தொடர்ந்தே செஞ்சிலுவைச் சங்கம் இந்த பணிக்கு அழைக்கப்பட்டது.

பருத்தித்துறையில் இருந்து புறப்படும் 'நரோமா' கப்பலை காங்கேசன் துறைமுகத்தில் கடற்படையினர் சோதனை செய்யக்கூடாது என்று விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கு அறிவித்துள்ளனர்.

பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு பாதுகாப்புப் படை பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளது. ஆனால் கப்பலில் பயணம் செய்யும் பிரயாணிகளை எந்த இடத்தில் வைத்துச் சோதனை செய்வது என்பதனைக் கடற்படையினரே தீர்மானிப்பர் என்று பிரிகேடியர் சரத் முனசிங்கா தெரிவித்தார். (அ)

## வடக்கே...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வல்கள் தெரிவித்தன.

இவ்விரு கப்பல்களிலும் ஏற்றுவதற்காக பொருள்களை கொள்வனவு செய்துள்ள ப. நோ. கூ. சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் தனியார் வியாபாரிகள், திணைக்களங்களின் பிரதிநிதிகள் கொழும்பில் பல நாட்களாக தங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-3]

## குடாநாட்டுக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொருள்களுக்கு பதிலாக 263 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களும் — கப்பல்கள் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வருடத்தில் முதல் 9 மாதங்களிலேயே குடாநாட்டுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படுவது வழக்கம் என்றும் —

6 மாதங்கள் கடந்து விடும் நிலையில் 25 சத வீதமான பொருள்களே எடுத்து வரப்பட்டுள்ளதால் — இந்த வருடத்தில் எஞ்சியுள்ள காலத்தில் உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு உண்டு என்றுபாவனையாளர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது [ஒ-3]

## ஆங்கில வகுப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழக தென்மராட்சிப் பிரிவினர் மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தில் இலவச ஆங்கில வகுப்பினை மூன்று பிரிவுகளாக கடந்த 14 ஆம் திகதி முதல் நடத்தி வருகின்றனர். (க-117)

## முஸ்லிம்களின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உருவாக்க வேண்டும் என்று அரசிடம் வலியுறுத்துவோம் — என்றும் அவர் கூறினார்

காத்தான்குடி முஸ்லிம்களின் விவகாரம் குறித்து தெரிவிக்கையில் —

விடுதலைப்புலிகளுக்கு எதிரான சக்திகள், தமிழ் - முஸ்லிம் மக்களிடையே கலவரங்களைத் தூண்டும் நோக்குடன் காத்தான் குடி முஸ்லிம் மக்களுக்கு கடிதம் எழுதியிருக்கலாம் என நம்புகிறோம்.

கேள்வி :— யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்களை புலிகள் இயக்கம் வெளியேற்றியுள்ளது, அதே போல கிழக்கில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்ற முயல்கிறீர்கள் என்று கூற நியாயம் இருக்கிறதல்லவா?

பதில் :— யாழ்ப்பாண நிகழ்ச்சி நடந்த கால கட்டம் வேறு. முஸ்லிம்மக்களை சமாதான சூழ்நிலை ஏற்படும் போது மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வரவழைக்கின்ற நோக்கத்தோடு நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

பலமாகவே கருதுகிறோம்

முஸ்லிம் மக்கள் கிழக்கில் இருப்பதை தமிழ் மக்களின் பலமாக புலிகள் கருதுகின்றார்களே தவிர முஸ்லிம் மக்களுக்கு எதிராக செயற்படும் நோக்கம் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் இது போன்ற வதந்திகளையும், பிரசாரங்களையும் விசமத்தனமான வேலைகளையும் நம்பக்கூடாது. விழிப்புடன் இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசும், ஏனைய சக்திகளும் இத்தகைய திட்டமிட்ட குழப்ப வேலைகளை செய்வது குறித்து அவர்கள் விழிப்புடன் இருந்து தமிழ் மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பதே எமது கருத்தாகும் — என்றார். (ஒ-3)

## தமிழீழப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேரணியில் கலந்து கொள்வதற்கு வசதியாக ரொறொண்டோ போக்குவரத்து சபை விசேட பஸ் சேவையை நடத்தியது.

பேரணியின் முன் பறையொலி எழுப்பிச் செல்ல — தமிழீழத்தின் இன்றைய நிலையை சித்திரிக்கும் ஆறு சிறிய ஊர்திகளும்—

3 ஆயிரத்துக்கு மேற்பட்ட சுலோகஅட்டைகள், பதாகைகள், தமிழீழத்தின் இன்றைய நிலையை சித்திரிக்கும் கார்ட்டூன்கள் என்பனவும்— எடுத்துச் செல்லப்பட்டன.

ஒன்ராறியோ நாடாளுமன்றத்துக்கு முன்பாக ஊர்வலம் முடிவடைந்தது.

கனேடிய சட்டத்தரணிகள், கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், கனேடிய மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அங்கு சமுகமளித்திருந்தனர்.

தமிழீழத்தையும், விடுதலைப் புலிகளையும் தமிழீழ மக்களின் நீதியான போராட்டத்தையும் கனேடிய அரசு அங்கீகரிக்க வேண்டும் என்று கோரும் மகஜர்கள் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

தமிழீழ அரசை அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரும் மனு ஒன்றும் அஞ்சலட்டை மூலம் கனடா பிரதமருக்கு அனுப்பப்படவிருக்கிறது.

கனடாவில் ஒன்ராறியோ மாநிலத்திலேயே அதிக ஈழத் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-3)

## கைப்பற்றப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- ★ ரி. 81 ரகத்துப்பாக்கிக்குரிய ரவைக்கூடு தாங்கி — 12
- ★ ரி.56 ரகத்துப்பாக்கிக்குரிய ரவைக் கூடு தாங்கி — 08
- ★ எம் 75 ரக குண்டுகள் — 05
- ★ ஏ. கே. தாங்கி அணி — 04
- ★ தலைக்கவசம் — 02
- ★ நடுத்தர ... — 744
- ★ இட்பாக் — 03

(ஒ-3)

# நினைவஞ்சலி

வருடம்-9 வருடம்-12



திருமதி
அந்தோனியாப்பிள்ளை
அந்தோனிப்பிள்ளை

தோற்றம்:
15 — 10 — 1918
மறைவு:
19 — 06 — 1986

அமரர்
நாகசெட்டி
நீ. அந்தோனிப்பிள்ளை

தோற்றம்:
04 — 04 — 1908
மறைவு:
07 — 04 — 1983

இறைபதமடைந்த எம் அருமைப் பெற்றோரை அன்புடன் நினைவு கூருகிறோம். இறைமிகு இன்பத்தில், இறைபுகழ் பாடி இன்புற்றிருக்க இறைவனை இறைஞ்சுகிறோம்.

அன்புடன் நினைவு கூரும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


நாகசெட்டிகமம்,
நானாட்டான்.

பற்றிமா வாசம்,
சில்லாலை.

தற்காலிக வதிவிடம்:
265, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

[37137]

# 47 ஆம் நினைவு நாள்



அமரர்

## சரவணமுத்து விமலானந்தன்

(அப்பு)

அவனியில் பவனி: 26 — 10 — 1961
பவனியின் இறுதி: 04 — 05 — 1995

நாற்பத்தி யேழாம் நினைவு நாள் என்கிறார்கள்
யாரைபற்றி யாரிங்கே நினைப்பது - உங்களை
மறந்திருந்தால் அல்லவோ நினைப்பதற்கு முடியும் - அன்பைத்
துறந்திருந்தால் அல்லவோ மறப்பதற்கு முடியும்
பொன்தாலி மாலையிட்டு மூன்றாண்டு முடியுமுன் - இந்தப்
பெண்தாலி கழற்றிவைக்க பேதை நான் என்ன செய்தேன்
அப்பாவென் றழைக்கின்ற மழலைகளைத் தான்பிரிய
தப்பென்ன செய்தார்கள் தவிக்கும் இரு பிள்ளைகளும்
உயிருக்குள் உயிரென்று உறுதிபடச் சொல்லிவிட்டு - இந்தப்
பயிருக்கு வேலியின்றி பரிதவிக்க விட்டதென்ன
உற்ற மனைவியொடு உதிரம் வளர் பிள்ளைகளும்
பெற்றோர், உடன்பிறந்தோர் பெருங்குரலில் ஓலமிட
சற்றும் கலங்காது சாவை நீ அணைத்ததென்ன
எப்படிப் பொறுப்போம் இத்துயரை
எப்படி மறப்போம் உன்நினைவை.

என்றுமுனை நேசிக்கும்:
அன்பு மனைவி, மக்கள், பெற்றோர்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

இல. 4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(37140)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 192/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19-06-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org